Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.246/2015

**Depositions of PW- 6**

| | | | |
|---|---|---|---|
| Name | திருமதி.சரஸ்வதி | Occupation | பணி ஓய்வு |
| Husband name | சந்திரசேகர் | Calling | |
| Village | விருதுநகர் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 06th day of July 2026.

06.07.2026

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் திருவில்லிபுத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று தற்போது விருதுநகரில் குடியிருந்து வருகிறேன். கடந்த 2013ம் வருடம் திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலைய சார்பு ஆய்வாளரிடமிருந்து வரப்பெற்ற கடிதத்தை பெற்று 1992ம் வருடம் முதல் 19.11.2013 வரையிலான காலத்திற்கு விருதுநகர் டவுண் வார்டு–3 சர்வே எண்.1054/1ல் உள்ள சொத்தின் பதிவு விவரங்கள் மற்றும் வில்லங்க சான்று ஆகியவற்றை கேட்டிருந்தார். அதன் பேரில் நான் அந்த காலத்திற்கான மேற்படி சொத்திற்கான 1992–2013 வரையிலான சர்வே எண்.1054/1ல் உள்ள சொத்தின் பதிவு விவரங்கள் மற்றும் வில்லங்க சான்று ஆகியவற்றின் உண்மை நகல்களை கவரிங் கடிதத்துடன் 20.11.2013 அன்று கொடுத்தேன். எங்கள் அலுவலக ந.க.எண்202/2013 நாள் 20.11.2013 ல் கையொப்பமிட்டு கொடுத்தேன். **கவரிங் கடிதம் அசாஆ.3 ஆகவும், சர்வே எண்.1054/1ல் உள்ள சொத்தின் பதிவு விவரங்கள் அடங்கிய ஆவணங்களின் உண்மை நகல் அசாஆ.4 ஆகவும், வில்லங்கச்சான்றின் உண்மை நகல் அசாஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.